நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மயிலாடுதுறை
முன்னிலை : திருமதி. M.M.J. உம்முல் பரிதா, B.A., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1,
மயிலாடுதுறை.
2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் மாசி திங்கள் 28ஆம் நாள்
2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் நாள் வியாழக்கிழமை

C.N.R.No.TNMY02-003021-2025

D.V.C.No. 33/2025

சிவசக்தி, வயது 29/2025
க/பெ. கார்த்தி,
த/பெ. ராஜேந்திரன்,
40 ஏ, வடக்கு வீதி,
திருவிழந்தூர், மயிலாடுதுறை. ........மனுதாரர்

// எதிர் //

1) கார்த்தி, வயது 34/2025
த/பெ. முருகையன்,

2) விஜயா, வயது 55/2025
க/பெ. முருகையன்,

3) சூர்யா, வயது 30/2025
த/பெ. முருகையன்,
(மேற்கண்ட அனைவரும்)
பெரியார் தெரு, 56 நிம்மேலி,
சீர்காழி, மயிலாடுதுறை. ....... எதிர்மனுதாரர்கள்

இந்த மனு இந்நீதிமன்றம் முன்பாக 25.02.2026ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. செந்தமிழ்செல்வன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. சேயோன் அவர்கள் ஆஜராகியும் எதிருரை தாக்கல் செய்யாததால் மனுதாரர் தரப்பு வாதத்தை பரிசீலித்தும் ஆவணங்களைப் பரீசிலித்தும், இதுநாள்வரை இந்தவழக்கு இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.12 18:57:03 +0530

**// உத்தரவு//**

மனுதாரர் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005, சட்டப்பிரிவுகள் 18, 19, 20, 22ன் கீழ் பாதுகாப்பு உத்தரவு, உறைவிட ஆணை, சீர்சாமான்கள் ஒப்படைப்பு, பணஉதவி மற்றும் இழப்பீடு கட்டளை கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.**<u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-</u>**

2.1 மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் கடந்த 04.02.2018ம் தேதியன்று திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது மனுதாரருக்கு 15 பவுன் தங்க நகைகளும், ரூ.3,00,000/- மதிப்புள்ள சீர்வரிசை சாமான்களும் மனுதாரரின் பெற்றோர்களால் மனுதாரருக்கு கொடுக்கப்பட்டது. மேற்படி நகைகளில் 9 1/2 பவுன் நகைகள் மட்டும் மனுதாரர் வசம் இருந்து வருகிறது. மற்ற அனைத்து பொருட்கள் மற்றும் நகைகள் அனைத்தும் 1, 2 எதிர்மனுதாரர்கள் வசமே உள்ளன.

2.2 1ம் எதிர்மனுதாரர் அளவுக்கு அதிகமாக குடித்துவிட்டு மனுதாரரை அடித்து துன்புறுத்தி வந்துள்ளார். மேற்படி 1ம் எதிர்மனுதாரர் நடவடிக்கைகளுக்கு 2, 3 எதிர்மனுதாரர்கள் உடந்தையாக இருந்துள்ளார்கள். மனுதாரர் கருவுற்று கருசிதைவு ஏற்பட்டுள்ளது. மேற்படி கருசிதைவு காரணம் கேட்டு 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரை மருத்துவமனையில் பரிசோதித்ததில் மனுதாரருக்கு எந்தவித குறைகளும் இல்லை. ஆனால் 1ம் எதிர்மனுதாரர் 2, 3 எதிர்மனுதாரர்களின் துர்போதனையை கேட்டுக்கொண்டு மனுதாரருக்கு பெரிய நோய் இருப்பதாக நினைத்துக்கொண்டு மனுதாரரை எவ்வித காரணமும் இன்றி 1ம் எதிர்மனுதாரர் மனுதாரர் பெற்றோர் வீட்டில் கடந்த 06.09.2017 அன்று விட்டுவிட்டு சென்றுவிட்டார்.

2.3 1ம் எதிர்மனுதாரர் கடந்த 05.11.2019ம் தேதியன்று மனுதாரருக்கு தொழு நோய் இருப்பதாகவும், தொழு நோயை மறைத்து திருமணம் செய்துவிட்டதாக பொய்யான காரணங்களை கூறி விவகாரத்து கேட்டு மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்ட மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருடன் வாழ வேண்டும் என்ற நோக்கத்தோடு தன்னை அழைத்து செல்ல அறிவுறுத்தி பதில் அறிவிப்பை கடந்த 17.11.2019ம் தேதியன்று அனுப்பியுள்ளார். 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் H.M.O.P.No.304/2019ன் படி விவாகரத்து பரிகாரம் கோர வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த இடைக்கால மனு I.A.No.01/2021 In H.M.O.Pno.304/2019 மனுதாரருக்கு வழக்கு செலவு தொகையாக 1ம் எதிர்மனுதாரர் ரூ.10,000/-மும், மாத இடைக்கால ஜீவனாம்சமாக ரூ.7,000/-மும் வழங்கிட உத்தரவாகியுள்ளது. மாண்புமிகு மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றம் பிறப்பித்துள்ள இடைக்கால ஜீவனாம்ச உத்தரவு படி 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இடைக்கால ஜீவனாம்சம்

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.12 18:57:09 +0530

கொடுக்காததால் மேற்படி விவாகரத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. மேலும் மனுதாரர் தரப்பில் நீதிமன்றத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்துள்ள ஜீவனாம்ச வழக்கு M.C.No.24/2020 என வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருடன் இணைந்து வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் நடவடிக்கை எடுக்காமல் இருந்து வந்தார். எதிர்மனுதாரர்கள் மனுதாரர் நகைகளை எல்லாம் விற்பனை செய்துவிட்டு மனுதாரரை தொழுநோயாளி என உறவினர்களிடம் கூறி மனுதாரரை குடும்ப வன்முறைக்கு ஆளாக்கி வருகின்றனர்.

2.4 மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர்களின் சந்தேகத்தை நிவர்த்தி செய்யும் வகையில் பலமுறை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திக்கொண்டு தனக்கு தொழு நோய் இல்லை என மருத்துவ பரிசோதனை மூலம் எடுத்துரைத்தும் எதிர்மனுதாரர்கள் மனுதாரரை தொழுநோயாளி என கூறி மனுதாரரை மிகுந்த மன வேதனைக்கு ஆளாக்கியுள்ளார். 1ம் எதிர்மனுதாரர் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிந்து அதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.20,000/- வரை சம்பாதித்து வருகிறார். மேலும் எதிர்மனுதாரர்களுக்கு சொந்தமான நஞ்சை, புஞ்சை நிலங்கள் மூலம் மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.30,000/- வரை வருமானம் பெற்று வருகிறார்கள். 2, 3 எதிர்மனுதாரர்கள் மனுதாரரை மன ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் குடும்ப வன்முறைக்கு உட்படுத்துவதோடு 1ம் எதிர்மனுதாரருக்கு தவறான துர்போதனைகளை கூறி தூண்டுதலாக இருந்து வருகின்றனர். எனவே, மனுதாரர் எதிர்மனுதாரர்களிடமிருந்து குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் பரிகாரம் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>3. எதிர்மனுதாரர்கள் தோன்ற தரப்பினராக கருதப்பட்டுள்ளார்கள்.</u>**

1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியும் எதிருரை தாக்கல் செய்யாததால் கடந்த 21.01.2026ம் தேதியன்று தோன்றாத் தரப்பினர்களாக்கப்பட்டுள்ளார்.

**<u>4. தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை</u>**

1. மனுதாரர் எதிர்மனுதாரர்களால் குடும்ப வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளாரா?
2. மனுதாரருக்கு பிரிவு 18ன் படி பாதுகாப்பு உத்தரவு கிடைக்கதக்கதா?
3. மனுதாரருக்கு பிரிவு 19ன் கீழான உறைவிட ஆணை வழங்க வேண்டுமா?
4. மனுதாரருக்கு பிரிவு 19(8)ன் கீழ் மனுதாரரின் பொருட்களையும் அவருடைய நகைகளையும் எதிர்மனுதாரர்களிடமிருந்து மீட்டு ஒப்படைக்கும்படி உத்தரவு கிடைக்கதக்கதா?
5. மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் பிரிவு 20 குடும்ப வன்முறை சட்டப்படி பணஉதவி தொகை கொடுக்க கடமைப்பட்டவரா?
6. மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் பிரிவு 22ன் படி இழப்பீடு வழங்க வேண்டுமா?

UMMUL FARITHA Digitally signed by UMMUL FARITHA Date: 2026.03.12 18:57:16 +0530

7. வேறு என்ன பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது.

5. மனுதாரர் தரப்பில் மனுதாரர் திருமதி. சிவசக்தி ம.சா.1ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளார்கள்.

**பிரச்சனை 1.**

6. மனுதாரர் தனது மனுவில், மனுதாரரும் 1ம் எதிர்மனுதாரரும் கணவன், மனைவி என்றும், அவர்களுக்கு இந்து திருமண குல வழக்கப்படி பெற்றோர் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் திருமணம் நடந்தது என்றும், திருமணத்தின் போது மனுதாரருக்கு சீதனமாக 15 பவுன் தங்க நகைகளும், மூன்று இலட்சம் மதிப்புள்ள சீர்சாமான்களும் கொடுக்கப்பட்டது என்றும், மேற்படி நகைகளில் 9 1/2 பவுன் நகைகள் மனுதாரரிடம் இருந்து வருகிறது என்றும், மற்ற எல்லா பொருட்கள் மற்றும் நகைகள் 1, 2 எதிர்மனுதாரர்களிடம் உள்ளது என்றும், திருமணத்திற்கு பின்பு 1ம் எதிர்மனுதாரரின் வீட்டில் வாழ்ந்து வருவதாகவும், ஆரம்ப நாட்களில் 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருடன் நல்ல நிலையில் குடும்பத் நடத்தி வந்தார் என்றும், அதன் பின்பு 1ம் எதிர்மனுதாரர் மது அருந்திவிட்டு மனுதாரரை துன்புறுத்தி வந்தார் என்றும், அதற்கு 2, 3 எதிர்மனுதாரர்கள் உடந்தையாக இருந்ததாகவும், மனுதாரர் தனது இல்லற வாழ்க்கையை கருத்தில் கொண்டு அவர்களின் நடவடிக்கையை பொறுத்துக்கொண்டு வாழ்ந்து வந்ததாகவும், மனுதாரர் கருவுற்று கருசிதைவு ஏற்பட்டது என்றும், அதற்கு காரணம் கேட்டு மருத்துவரை அணுகிய போது மருத்துவர் மனுதாரருக்கு எந்த குறையும் இல்லை என்று கூறியும், 2, 3 எதிர்மனுதாரர்களின் துர்போதனையை கேட்டுக்கொண்டு மனுதாரருக்கு பெரிய நோய் இருப்பதாக நினைத்து 1ம் எதிர்மனுதாரர் எந்த காரணமுமின்றி மனுதாரரின் பெற்றோர் வீட்டில் மனுதாரரை கொண்டு சென்று விட்டுவிட்டு வந்தார் என்றும், அதன் பின்பு மனுதாரருக்கு தொழுநோய் இருப்பதை மறைத்து திருமணம் செய்துவிட்டதாக பொய்யான காரணத்தை கூறி விவகாரத்து கேட்டு மனுதாரருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றும், அதற்கு மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்ற நோக்கத்தோடு தன்னை அழைத்து செல்ல வேண்டும் என்று அறிவுறுத்தி பதிலறிவிப்பு அனுப்பினார் என்றும், அதன் பின்பு 1ம் எதிர்மனுதாரர் விவகாரத்து வழக்கு தாக்கல் செய்ததிலிருந்து மனுதாரருக்கு இடைக்கால ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டு இருந்ததில் அதனை 1ம் எதிர்மனுதாரர் செயல்படுத்தவில்லை என்பதால் விவகாரத்து வழக்கு தள்ளுபடியாகி உள்ளது என்றும், 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஜீவனாம்ச வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரரும் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் 1ம் எதிர்மனுதாரர் செய்து வந்த வன்முறைகளுக்கு எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வந்ததை பயன்படுத்தி மனுதாரரின் நகைகளை விற்று மனுதாரரை தொழுநோயாளி என்று உறவினர்களிடம் கூறி மனுதாரரை குடும்ப

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.12 18:57:21 +0530

வன்முறைக்கு ஆளாக்கி வருகிறார் என்று கூறியுள்ளார். அதனால் மனுதாரருக்கு இல்லாத ஒரு நோயை இருப்பதாக கூறிக்கொண்டு எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு மனஉளைச்சல் ஏற்படுத்தி வருகிறார்கள் என்றும், மனுதாரரும் தனக்கு நோய் இல்லை என்பதை நிரூபிக்க பல முறை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திக்கொண்டு நிரூபித்தும் எதிர்மனுதாரர்கள் மனுதாரரை மனஉளைச்சலுக்கு உட்படுத்தி வருகிறார்கள் என்றும் கூறியுள்ளார்.

7. மேற்படி சங்கதிகளை பொறுத்து நிரூபிக்க மனுதாரர் ம.சா.ஆ.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 ஆக 04.02.2018ம் தேதியிட்ட திருமண அழைப்பிதழ் அசல், ம.சா.ஆ.2ஆக 05.11.2019ம் தேதியிட்ட 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல், ம.சா.ஆ.3ஆக 17.11.2019ம் தேதியிட்ட மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு நகல், ம.சா.ஆ.4ஆக 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்துள்ள விவாகரத்து மனு H.M.O.P.No.304/2019 நகல், ம.சா.ஆ.5ஆக மனுதாரர் தரப்பில் H.M.O.P.No.304/2019ல் தாக்கல் செய்துள்ள எதிருரை நகல், ம.சா.ஆ.6ஆக மனுதாரரின் ஆதார் அட்டை நகல், ம.சா.ஆ.7ஆக மனுதாரரின் மருத்துவ அறிவிக்கை நகல் ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் மனுவில் கூறி இருக்கும் சங்கதிகளை உறுதிப்படுத்தும் விதத்தில் சாட்சியம் அளித்துள்ளார். மனுதாரரின் மனு மற்றும் மனுதாரர் தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தபோது மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் 04.02.2018ம் தேதி திருமணம் நடைபெற்றுள்ளது என்பது தெரிய வருகிறது. மனுதாரர் கூறியுள்ள சங்கதிகளை மறுத்து எதிர்மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தி மனுதாரருக்கு குடும்ப வன்முறை இழைக்கவில்லை என்று நிரூபணம் செய்யவில்லை என்பதால் மனுதாரரின் வழக்கை 1ம் எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டதாகவே இந்நீதிமன்றம் அனுமானிக்கின்றது. மேலும், மனுதாரருக்கு தொழுநோய் இருப்பதாக கூறி எதிர்மனுதாரர்கள் மனுதாரரை மனஉளைச்சலுக்கு உட்படுத்தி வருகிறார்கள் என்பது மனுதாரர் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்பதால் மனுதாரருக்கு மன ரீதியாக எதிர்மனுதாரர்கள் குடும்ப வன்முறை இழைத்து வருகிறார்கள் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், மனுதாரருக்கு தொழு நோய் இருப்பதாக கூறி மனுதாரரை அவரது பெற்றோர் வீட்டில் கொண்டு சென்றுவிட்டு விட்டு விவகாரத்து கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியும் மனுதாரருக்கு எதிராக விவகாரத்து வழக்கும் தாக்கல் செய்துள்ளதிலிருந்து மனுதாரரை எதிர்மனுதாரர் காரணம் இல்லாமல் விட்டு பிரிந்து வாழ்ந்து வந்து 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரை பராமரிக்காமல் இருந்து வருகிறார் என்பதை அறிய முடிகிறது. மேலும், மனுதாரரும் 1ம் எதிர்மனுதாரரும் தற்போது தனித்தனியாக பிரிந்து வாழ்ந்து வருவதாக தெரிய வருகிறது. எனவே, மனுதாரர் 1ம் எதிர்மனுதாரர் பிரிந்து வாழ்ந்து வரும் காலக்கட்டத்தில் மனுதாரரை 1ம் எதிர்மனுதாரர் பராமரிக்காமல் இருந்து வருவதால்

UMMUL FARITHA Digitally signed by UMMUL FARITHA Date: 2026.03.12 18:57:28 +0530

மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் பொருளாதார ரீதியாக வன்முறை இழைத்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரால் பொருளாதார ரீதியாகவும் குடும்ப வன்முறைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார் என்பதை தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் இந்நீதிமன்றத்தில் நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**பிரச்சனை 2**

8. மனுதாரருக்கு பிரிவு 18ன் கீழ் மனுதாரர் பாதுகாப்பு கட்டளை வழங்க உத்தரவு கோரியுள்ளார். மேற்படி மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் தற்போது மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து வசித்து வருவதாக தெரிவித்துள்ளார். மேலும், மனுதாரருக்கு இல்லாத ஒரு நோயை இருப்பதாக கூறிக்கொண்டு உறவினர்களிடம் மனுதாரருக்கு தொழுநோய் இருப்பதாக கூறி அதனை நிரூபிக்காமல் மனுதாரரை மன உளைச்சலுக்கு ஆளாக்கி வருகிறார் என்பது தெரிய வருவதால் மனுதாரரின் நற்பெயரை சமூதாயத்தில் கெடுக்கும் நோக்கத்தோடு செயல்பட்டு வரும் எதிர்மனுதாரர்களிடமிருந்து மனுதாரருக்கு பிரிவு 18 குடும்ப வன்முறை சட்டப்படி பாதுகாப்பு உத்தரவு வழங்கவேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரருக்கு பிரிவு 18 குடும்ப வன்முறை சட்டப்படி பாதுகாப்பு உத்தரவு கிடைக்கதக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**பிரச்சனை 3**

9. மனுதாரர் பிரிவு 19–ன் கீழ் உறைவிடக் கட்டளை அல்லது அதற்கான வாடகை செலுத்த வேண்டும் என கோரியுள்ளார். மனுதாரர் தனது மனுவிலும், நிரூபணவாக்குமூலத்திலும் மனுதாரர் தற்போது மயிலாடுதுறை திருவிழந்தூர் வடக்கு வீதியில் வசித்து வருவதாக கூறியுள்ளார். மேற்படி மனுதாரர் தரப்பு சங்கதிகளைப் பொறுத்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யவில்லை. எனவே, மனுதாரர் தொடர்ந்து 1ம் எதிர்மனுதாரர் வீட்டில் நுழையும் இடத்தில் தொடர்ந்து இருப்பதற்கு உரிமை அளித்து கட்டளை வழங்க வேண்டும் என்ற பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றும், மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் வசித்து வரும் வீட்டில் குடியமர்த்துவதற்கு விரும்பவில்லை என்றால் அதே அளவில் இருப்பிட வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் அல்லது அதற்கு வாடகை செலுத்த வேண்டும் என்ற பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்றும், எனவே, 1ம் எதிர்னுதாரர் மனுதாரருக்குரிய இருப்பிட வசதியை ஏற்படுத்திக்கொடுக்க தவறும்போது மாற்று உறைவிடத்திற்கான வாடகையை 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்தி வைக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிட்டு மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து மாற்று உறைவிடத்திற்கான வாடகை பெற உரிமையுடையவர் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. எனவே, பிரிவு 19ன் கீழ் மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து மாற்று உறைவிடத்திற்கான வாடகை ரூ.5,000/– கிடைக்கதக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

UMMUL FARITHA Digitally signed by UMMUL FARITHA Date: 2026.03.12 18:57:35 +0530

**பிரச்சனை 4**

10. மனுதாரருக்கு பிரிவு 19(8) குடும்ப வன்முறை சட்டப்படி மனுதாரரின் சீதனபொருட்கள் மற்றும் நகைகள் ஆகியவற்றை எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு திரும்ப ஒப்படைக்கும்படி உத்தரவு கோரியுள்ளார். மனுதாரர் தனது மனுவிலும் நிரூபணவாக்குமூலத்திலும், மனுதாரருக்கு 15 பவுன் நகைகள், ரூ.3,00,000/− மதிப்புள்ள சீர்வரிசை பொருட்கள் கொடுத்ததாகவும் கூறியுள்ளார். மேற்படி நகையில் 9 1/2 பவுன் மட்டும் மனுதாரர் வசம் உள்ளது என்றும், மற்ற அனைத்து நகைகளும் பொருட்களும் எதிர்மனுதாரர்கள் வசம் உள்ளது என்றும் அதனை விற்பனை செய்து விட்டு மனுதாரரை தொழுநோயாளி என்று உறவினர்களிடம் கூறி மனுதாரரை குடும்ப வன்முறைக்கு ஆளாக்கி வருவதாக கூறியுள்ளார். மேற்படி எதிர்மனுதாரர்கள் மனுதாரரின் நகைகள் மற்றும் சீர்வரிசை பொருட்கள் தன்னிடம் எதுவும் இல்லை என்று நிரூபிக்க இந்நீதிமன்றத்தில் தகுந்த சாட்சியத்தினை முன்னிலைப்படுத்தவில்லை. மாறாக மனுதாரருக்கு தொழுநோய் இருப்பதாக கூறி வருகிறார்கள் என்பது 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள விவகாரத்து வழக்கின் மூலமாகவும், ஜீவனாம்ச வழக்கில் முன்வைக்கப்பட்ட எதிர்வாதத்தின் மூலமாகவும் தெரிய வருகிறது. எனவே, மேற்படி சங்கதியை நிரூபிக்கும் பொருட்டு ம.சா.1ன் சாட்சியமளித்துள்ளதால் நகைககள் மற்றும் சீர்வரிசை பொருட்களை திரும்ப கேட்டு பிரிவு 19(8)ன் படி மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கதக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**பிரச்சனை 5**

11. மனுதாரர் பிரிவு 20ன் கீழ் பண உதவி தொகை கோரியுள்ளார். மனுதாரர் தனது மனுவில், மனுதாரருக்கு மாதம் ரூ.20,000/−ம் 1ம் எதிர்மனுதாரர் ஜீவனாம்சமாக வழங்க வேண்டுமென கோரியுள்ளார். மனுதாரர் தனது மனுவிலும், நிரூபண வாக்குமூலுத்தில் கூறியுள்ள படி 1ம் எதிர்மனுதாரர் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிந்து மாதம் ரூ.20,000/−ம் சம்பாதித்து வருகிறார் என்று மனுதாரர் தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை. மேலும், மனுதாரருக்கு ஜீவனாம்ச வழக்கான M.C.No.24/2020 என்ற வழக்கில் மாதம் ரூ.5,000/−ம் கொடுக்க வேண்டும் என்று உத்தரவாகியுள்ளது. மனுதாரருக்கு மேற்படி மாதம் ரூ.5,000/−ம் போதுமானதாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் மன ரீதியாக வன்முறை இழைத்து வருவதாலும், 1ம் எதிர்மனுதாரர் இதுநாள்வரை மனுதாரரை பராமரிக்காமல் இருந்து வருவதாலும், 1ம் எதிர்மனுதாரரே மனுதாரரை மனைவி என்ற முறையில் பராமரிக்க கடமைப்பட்டுள்ளதால் மனுதாரரை 1ம் எதிர்மனுதாரர் அவர் வாழும் வாழ்க்கை சூழ்நிலை மற்றும் தரத்திற்கு ஏற்ப பராமரிக்க வேண்டியது அவருடைய கடமை என்பதாலும், மனுதாரருக்கு தேவைப்படும் மருத்துவ செலவுகள் மற்றும் அடிப்படை செலவுகளுக்கு M.C.No.24/2020 வழக்கில் உத்தரவாகியுள்ள மாதம் ரூ.5,000/−ம் தவிர

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.12 18:57:46 +0530

கூடுதலாக மாதம் ரூ.3,000/—ம் பண உதவி தொகை மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் வழங்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

<u>பிரச்சனை 6</u>

12. மனுதாரர் பிரிவு 22ன் கீழ் ரூ.15,00,000/— இழப்பீடு 1ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு கொடுக்க வேண்டும் என கோரியுள்ளார். ஆனால் அவ்வளவு பெரிய தொகையை இழப்பீடாக பெறுவதற்கு போதிய காரணங்கள் எதுவும் சொல்லப்படவில்லை. இருப்பினும் மனு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை கருத்தில் கொண்டும், மனுதாரரின் சங்கதிகளை கருத்தில் கொண்டும், 1ம் எதிர்மனுதாரரின் வருமானத்தை கருத்தில் கொண்டும், மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் ஏற்படுத்திய மனஉளைச்சலுக்கு இழைப்பீடாக மனுதாரருக்கு ரூ.30,000/—வழங்க உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

13. **முடிவில், இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

1) மனுதாரருக்கு பிரிவு 18 குடும்ப வன்முறை சட்டப்படி பாதுகாப்பு உத்தரவு கிடைக்கதக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

2) மனுதாரருக்கு பிரிவு 19ன் கீழ் 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து மாற்று உறைவிடத்திற்கான வாடகை ரூ.5,000/—ம் கிடைக்கதக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

3) மனுதாரருக்கு பிரிவு 19(8)ன் படி மனுதாரர் கோரியுள்ள நகைகள் மற்றும் சீர்வரிசை பொருட்கள் மனுதாரருக்கு கிடைக்கதக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

4) மனுதாரருக்கு பிரிவு 20ன் படி ஏற்கனவே M.C.No.24/2020 வழக்கில் உத்தரவாகியுள்ள மாதம் ரூ.5,000/—ம் தவிர கூடுதலாக மாதம் ரூ.3,000/—ம் பண உதவி தொகை மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் வழங்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. இம்மனு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து கணக்கிட்டு பணஉதவி தொகையினை ஒவ்வொரு மாதமும் முதல் 5 தேதிக்குள் கொடுக்க வேண்டியது எனவும் இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

5) மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகையாக ரூ.30,000/— வழங்கவேண்டும் என இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது. மேற்படி இழப்பீட்டு தொகையை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் மனுதாரருக்கு வழங்கவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.12 18:57:52 +0530

6) இருதரப்பினர்களின் உறவு முறையை கருத்தில் கொண்டு அவர்களது செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.12 18:57:57 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்:</u>**

ம.சா.1 – திருமதி. சிவசக்தி

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

ம.சா.ஆ.1 – 04.02.2018ம் தேதியிட்ட திருமண அழைப்பிதழ் அசல்

ம.சா.ஆ.2 – 05.11.2019ம் தேதியிட்ட 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல்

ம.சா.ஆ.3 – மனுதாரரின் ஆதார் அட்டை நகல்17.11.2019ம் தேதியிட்ட மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு நகல்

ம.சா.ஆ.4 – 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்துள்ள விவாகரத்து மனு H.M.O.P.No.304/2019 நகல்

ம.சா.ஆ.5 – மனுதாரர் தரப்பில் H.M.O.P.No.304/2019ல் தாக்கல் செய்துள்ள எதிருரை நகல்

ம.சா.ஆ.6 – மனுதாரரின் ஆதார் அட்டை நகல்

ம.சா.ஆ.7 – மனுதாரரின் மருத்துவ அறிவிக்கை நகல்

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:</u>** இல்லை

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.12 18:58:04 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை.